வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 6.9.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

**நீர் வளத்தின் சேமிப்பு**, சமூகத்தின் **கடமைப்பற்றே** தவிர, வெறும் **அரசுக் கொள்கை மட்டுமே** அல்ல என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

அவரவர் **தாய் மொழி**யில், கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தையும், பிரதமர் வலியுறுத்தி உள்ளார்.

நாட்டில், **தொடக்க நிலை மருத்துவ வசதி**கள் வலுவாக இருந்தால் தான், பிற்காலத்தில், சுகாதார துறையின் **சுமை** குறையும் என்று, **நிதி ஆயோக்** உறுப்பினர் டாக்டர் வி கே பால் கூறி உள்ளார்.

புதுச்சேரியில், மத்திய அரசின் **ஆதி அருணிமா-** பழங்குடிக் கைவினைத் திருவிழாவை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று மாலை, தொடக்கி வைக்கிறார்.

மோடி-நீர்வளம்

நீர்வளத்தின் சேமிப்பு சமூகத்தின் கடமைப்பற்றே தவிர, வெறும் அரசுக் கொள்கை மட்டுமே அல்ல என்று பிரதமர் திரு நரேந்திர மோடி

கூறி உள்ளார். இன்று காணொளி காட்சி மூலம், குஜராத் மாநிலம் சூரத்தில், இன்று நடைபெற்ற, **நீர் சேமிப்பில் மக்கள் பங்கேற்பு** இயக்கத்தின் தொடக்க விழாவில் அவர் பேசுகையில், நீர் வளத்தை சேமிப்பது மக்களின் கூட்டு முயற்சி என்றும், இப்புண்ணியச் செயலில், மக்களின் பொறுப்புணர்வு மற்றும் தாராள மனப்பான்மைக்கு முக்கிய இடம் இருப்பதாகவும் கூறினார். வரவிருக்கும் தலைமுறைகளுக்கு நீடித்த எதிர்காலம் ஒன்றை விட்டுச் செல்ல, நீர் சேமிப்பு முயற்சிகளில் மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார். எதிர்கால சந்ததியினர் நம்மை மதிப்பிடும் போது, நீர்வளம் பற்றிய நமது மனப்பாங்கே, முக்கிய காரணியாக திகழும் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தியாவின் கலாச்சார மரபுகளில் நீர் சேமிப்பிற்கு முக்கிய இடம் இருப்பதை பிரதமர் தமது உரையில் சுட்டிக் காட்டினார். ஜல்ஜீவன் இயக்கம், அடல் நிலத்தடி நீர் திட்டம் போன்ற அரசின் முயற்சிகள், இந்த மரபின் நீட்சியாகவே அமைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். நீர் பற்றாக்குறையை சமாளிக்க, புதிய, புதுமையான தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டிய தருணம் என்று பிரதமர் கூறினார். மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு சிஆர் பாட்டீல், குஜராத் முதலமைச்சர் திரு பூபேந்திர பட்டேல் ஆகியோர், மாநில அளவிலான இந்த ஜல் சஞ்சய்-ஜன் பாகிர்தாரி இயக்கத்தை தொடக்கி வைத்தனர். இந்த இயக்கத்தின் கீழ்

குஜராத் மாநிலம் முழுவதும் 24 ஆயிரத்து 800 இடங்களில் மழை நீர் சேகரிப்பு வசதிகளை நிறுவ, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மோடி-சந்திப்பு

தாய் மொழியில் கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார். குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு-விடம் நேற்று தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்களை, இன்று புதுடெல்லியில் பிரதமர் சந்தித்துப் பேசுகையில், ஆசிரியர்கள், உள்ளூர் நாட்டுப்புறக் கதைகளை, வெவ்வேறு மொழிகளில் மாணவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும் என்றும், இதனால் மாணவர்கள் பல மொழிகளை கற்று, நாட்டின் துடிப்பான கலாச்சாரத்தை அறிந்து கொள்ள ஏதுவாகும் என்றும் கூறினார். ஆசிரியர்கள் மாணவர்களை கல்விச் சுற்றுலா அழைத்துச் சென்று, நாட்டின் பன்முகத் தன்மையை எடுத்துக் காட்ட வேண்டும் என்றும் இதனால் சுற்றுலாத்துறை மேம்பட்டு உள்ளூர் பொருளாதாரம் வலுப்பெறும் என்றும் அவர் தெரிவித்தார். விருது பெற்ற ஆசிரியர்கள் இந்த சந்திப்பின் போது கற்பித்தல் துறையில் தங்களின் அனுபவங்களை, பிரதமருடன் பகிர்ந்து கொண்டனர். இவர்கள் சமூக ஊடகம் மூலம் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு, இத்தகைய அனுபவங்களை தொடர்ச்சியான முறையில் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளலாம் என பிரதமர் ஆலோசனை வெளியிட்டார். கற்பித்தல் பணிக்கு அப்பாற்பட்டு சமூகப் பணியிலும்

ஈடுபடும் ஆசிரியர்கள் பற்றிய உதாரணங்களையும் அவர் எடுத்துக் கூறினார். மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான இந்த சந்திப்பின் போது உடன் இருந்தார்.

*ஜெயசங்கர் பாபு*

குடியரசு தலைவரிடம் தேசிய விருது பெற்ற நல்லாசிரியர்களில் **புதுச்சேரி பல்கலைக் கழகத்தின்** இந்தி மொழித் துறை **இணைப் பேராசிரியர்** டாக்டர் **ஜெய சங்கர் பாபு**-வும், ஒருவராவார். **கல்வி இதழியல்** துறையில் இணையற்ற பங்களிப்புச் செய்துள்ள டாக்டர் **ஜெய சங்கர் பாபு**, 1999-ஆம் ஆண்டு **டிஜிட்டல் எழுத்தறிவு இயக்கம்** தொடக்கப்பட்டது முதல், 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அலுவலகங்களில், இந்திய மொழிகளில் கணிப்பொறியின் பயன்பாடு, மற்றும், **மின்னணு எழுத்த**றிவை பரப்புவதிலும், முக்கியப் பங்களித்துள்ளார். தொடர் கல்வி மற்றும் புதுமையாக்கத்தில், டாக்டர் **ஜெய சங்கர் பாபு**விற்குள்ள அர்ப்பணிப்பை பாராட்டி, உயர்கல்வி துறைக்கான பிரிவில், தேசிய நல்லாசிரியர் விருது, அவருக்கு வழங்கப் பட்டுள்ளது.

*கிரிராஜ் சிங்*

மத்திய அரசு, தொழில்நுட்ப ஜவுளித் துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கு ஆயிரத்து 400 கோடி ரூபாயும், உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்பு திட்டத்திற்கு 10 ஆயிரம் கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்துள்ளது. மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங்,

முன்னேறிய இந்தியா-நீடித்த வளர்ச்சிக்கான தொழில் நுட்ப ஜவுளிகள் என்ற தலைப்பில் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற மாநாட்டில் பேசுகையில், இதைத் தெரிவித்தார். பாதுகாப்பு, சுகாதாரம், விண்வெளி வேளாண்மை உள்ளிட்ட துறைகளில் தொழில் நுட்ப துணி ரகங்களின் தேவை, பெருமளவில் அதிகரித்து இருப்பதாக அவர் கூறினார். பல்வேறு புதுமையாக்க முயற்சிகளுக்காக, அரசு, மாணவர்களுக்கு, 50 லட்சம் ரூபாய் அனுமதித்து இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் 40 பிரிவுகளைச் சேர்ந்த தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும். 2030-ஆம் ஆண்டிற்குள் வேலை வாய்ப்புகளை பெருக்குவதற்கான முக்கிய காரணியாக இது திகழும் என்றும் அவர் கூறினார்.

ஓணம்

கேரளத்தில் 10 நாள் ஓணம் கொண்டாட்டங்கள், கொச்சி அருகே திருப்புணித்துறா-வில் இன்று நடைபெற்ற, அத்தச் சமயம் ஊர்வலத்துடன், கோலாகலமாக தொடங்கி உள்ளன. மாநில சட்டப் பேரவைத் தலைவர் திரு ஏ என் ஷம்சீர், இந்த ஊர்வலத்தை தொடக்கி வைத்தார். கேரளத்தின் வளமான கலாச்சார மரபுகளை வெளிப்படுத்தும் வகையில் வண்ண மயமான அலங்கார வண்டிகள், தாளவாத்திய இசை மற்றும் பாரம்பரிய நடனங்கள், இதில் இடம் பெற்றன.

*நிதி ஆயோக்*

தேசத்தைக் **கட்டியமைக்கும்** பணிகளுக்கு, **தொடக்க நிலை சுகாதார வசதி**களை வலுப்படுத்துதல் மிக அவசியம் என்று, சுகாதாரத் துறைக்கான **நிதி ஆயோக்** உறுப்பினர் டாக்டர் வி கே பால் கூறி உள்ளார். **டிஜிட்டல் தீர்வுகள் மூலம் அனைவருக்குமான சுகாதார வசதிகள்** என்பது குறித்து, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற மாநாட்டில் அவர் பேசுகையில், தொடக்க நிலை மருத்துவ வசதிகள் வலுவாக இருந்தால் தான், பிற்காலத்தில், சுகாதார துறையின் **சுமை** குறையும் என்றார். டிஜிட்டல் தீர்வுகளால், சுகாதாரம் உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் மக்களின் வாழ்க்கை எளிதாகி, வாழ்க்கைத் தரம் உயரும் என்று அவர் தெரிவித்தார். மத்திய சுகாதாரத் துறை செயலர் திரு **அபூர்வ சந்திரா** இந்நிகழ்ச்சியில் பேசுகையில், தொலை நிலை மருத்துவ சிகிச்சை, மனநல ஆலோசனைக்கான **டெலி-மெடிசின்**, மற்றும், **டெலி-மனஸ்** வசதிகளின் பயன்பாடும், ரத்த தானம் பற்றிய **இ-ரக்த கோஷ்** வசதியின் பயன்பாடும் அதிகரித்து வருவதாக தெரிவித்தார். நாட்டில் ஆண்டு தோறும் பிறக்கும் 2.7 கோடி குழந்தைகள், மற்றும், தாய்மார்கள் -கருவுற்ற பெண்களின், தடுப்பூசி மற்றும் மருந்து விவரங்களை, டிஜிட்டல் முறையில் நிரந்தரமாக சேமித்து வைப்பதற்கான, **யு-வின்** இணைய தளம் அடுத்த மாதம் தொடக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

*பழங்குடி விழா*

புதுச்சேரியில், மத்திய அரசின் **இந்திய பழங்குடி கூட்டுறவு விற்பனை வளர்ச்சிக் கூட்டமைப்பு** சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள **ஆதி அருணிமா** திருவிழாவை, இன்று மாலை முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைக்கிறார். பழங்குடி மக்களின் கைவினைக் கலை, கலாச்சாரம், உணவு, தொழில் முனைவு மற்றும் வர்த்தக உணர்வை கொண்டாடும் வகையிலான, இக்கண்காட்சி மற்றும் விற்பனைத் திருவிழா, கடற்கரை சாலை காந்தி திடல் மற்றும் கைவினை பஜார் வளாகத்தில் வரும் 15-ஆம் தேதி வரை நடைபெறும்.

*ரங்கசாமி-வாழ்த்து*

விநாயகர் சதுர்த்தி திருநாள் நாளை கொண்டாடப்படுவதை முன்னிட்டு, புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி, மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். முழுமுதற் பொருளாம் விநாயகப் பெருமானை போற்றி வணங்கும் இத்திருநாள், அனைவரின் வாழ்விலும், வளம், நலம், குணம் உள்ளிட்ட எல்லாச் செல்வங்களையும், அள்ளித் தருவதாக அமையட்டும் என்று அவர் தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார். ஆனைமுகத்தோனின் அருளால், தொட்டது யாவும் துலங்கி, அனைவரும் நீடூழி வாழத் தாம் வாழ்த்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

*சிறப்பு பேருந்து*

ஓணம் திருநாளை ஒட்டிய தொடர் விடுமுறையைக் கருத்தில் கொண்டு புதுச்சேரி சாலை போக்குவரத்துக் கழகம், வரும் 13-ஆம் தேதி,

புதுச்சேரியில் இருந்து மாகே பகுதிக்கு, விழுப்புரம் வழியாக சிறப்பு பேருந்து ஒன்றை இயக்க உள்ளது. அன்றைய தினம் மாலை 6 மணிக்கு பேருந்து புறப்படும் என்றும் முன்பதிவுடன் சேர்த்து கட்டணம் 750 ரூபாய் என்றும், பிஆர்டிசி அறிவித்துள்ளது. சிறப்பு பேருந்தில் பயணம் செய்ய விரும்புவோர், புதுச்சேரி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள முன்பதிவு மையம், மற்றும், **பஸ் இண்டியா ஆப்** மூலம் முன் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை

வங்க கடலில் நேற்று உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று, மத்திய மற்றும் அதனை ஒட்டிய, வடமேற்கு வங்க கடல் பகுதியில் நிலவுகிறது. இது, வடக்கு திசையில் நகர்ந்து வரும் 9-ஆம் தேதி வாக்கில், வடமேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்றும், அதற்கு அடுத்த 3-4 தினங்களில், மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, வடக்கு ஒடிசா-மேற்குவங்கம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 12-ஆம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்னார் வளைகுடா உள்ளிட்ட தமிழக கடலோரப் பகுதிகள், மற்றும், வங்க கடல் பகுதிகளில்,

அதிகபட்சம் மணிக்கு 65 கிலோ மீட்டர் வேகத்தில் சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சென்னை மாவட்டம் சோழிங்கநல்லூர் மாவட்டத்தில் 8 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரி நகரப் பகுதியில் 5 சென்டிமீட்டர், மற்றும், பத்துக் கண்ணில் 4 செ மீ மழை பெய்துள்ளது.

*பாரா லிம்பிக்ஸ்*

பாரீஸ் பாராலிம்பிக்ஸ் போட்டிகளின் ஆடவர் உயரம் தாண்டுதல் பிரிவில் இந்தியாவின் பிரவீண் குமார் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். இதையும் சேர்த்து இந்தியா இதுவரை 6 தங்கம், 9 வெள்ளி உட்பட, மொத்தம் 26 பதக்கங்களை வென்று, பதக்க பட்டியலில் 16- இடத்திற்கு முன்னேறி உள்ளது.

*நட்டா*

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு நாட்டில், மருத்துவ சிகிச்சை வசதிகளை மேம்படுத்துவதற்கு அப்பாற்பட்டு, நோய் வருமுன் காக்கும் அணுகுமுறை உள்ளிட்ட முழுமையான சுகாதார சேவைகளுக்கு முக்கியத் துவம் அளித்து வருவதாக மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜேபி நட்டா கூறி உள்ளார். இன்று பட்னாவில், IG-IMS மருத்துவமனையின், பிராந்திய கண் மருத்துவக் கழகத்தின் திறப்பு விழாவில் உரையாற்றிய அவர் இந்தியாவின் ஆயுஷ் மான் பாரத் திட்டம்

12.75 கோடி குடும்பங்களின் மருத்துவ தேவைகளை நிறைவேற்றி வருவதாகவும், இத்திட்டத்தின் கீழ், நாட்டின் 44 சதவிகித மக்கள், 5 லட்சம் ரூபாய் வரையிலான சிகிச்சை வசதிகளை பெறுவதாகவும் கூறினார். நாட்டில் முன்பு, 6 எய்ம்ஸ் மருத்துவமனைகள் மட்டுமே இருந்த நிலையில், தற்போது இந்த எண்ணிக்கை 22-ஆக உயர்த்தப் பட்டுள்ளதாகவும் திரு நட்டா தெரிவித்தார். முன்னதாக பீகார் மாநிலத்திற்கான 2 நாள் பயணமாக இன்று பட்னா வந்து சேர்ந்த அவர் பீகார் முதலமைச்சரும், ஐக்கிய ஜனதா தளத்தின் தேசிய தலைவருமான திரு நிதிஷ்குமாரை அவரது இல்லத்தில் சந்தித்தார். அவர் இப்பயணத்தின் போது கயா, பாகல்பூர், முசாபர்பூர் மற்றும் தர்பங்கா மருத்துவமனைகளில், அதிசிறப்பு சிகிச்சைப் பிரிவுகளை திறந்து வைக்கிறார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

**நீர் வளத்தின் சேமிப்பு**, சமூகத்தின் **கடமைப்பற்றே** தவிர, வெறும் **அரசுக் கொள்கை மட்டுமே** அல்ல என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

அவரவர் **தாய் மொழி**யில், கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தையும், பிரதமர் வலியுறுத்தி உள்ளார்.

நாட்டில், **தொடக்க நிலை மருத்துவ வசதி**கள் வலுவாக இருந்தால் தான், பிற்காலத்தில், சுகாதார துறையின் **சுமை** குறையும் என்று, **நிதி ஆயோக்** உறுப்பினர் டாக்டர் வி கே பால் கூறி உள்ளார்.

புதுச்சேரியில், மத்திய அரசின் **ஆதி அருணிமா-** பழங்குடிக் கைவினைத் திருவிழாவை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று மாலை, தொடக்கி வைக்கிறார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------